புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தமிழ்நதியின் சிறுகதையில் மானுட ஆளுமைப் பண்பு

ம. புனிதா
முனைவர் பட்ட ஆயவாளர் (முழுநேரம்),
தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை..

ஆய்வுச் சுருக்கம்

தமிழ்நதியின் புனைவுகளில் தனிமனித ஆளுமை என்ற தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில் முன்னுரை, ஆளுமை, நித்திலாவின் புத்தகங்கள், யூங்-ன், வகைப்பாடும், நித்திலாவும், ஈகோ (Ego), இட் (Id) ஆகிய துணைத் தலைப்புகளில் தனிமனித ஆளுமை ஆராயப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டுரையில் நிறைவாக தொகுப்புரை வழங்கப்பட்டுள்ளது.

## முன்னுரை

இலக்கியத்தின் பயன் என்படுவது மனிததத்துவத்தின் வளர்ச்சிக்குத் துணை நிற்பதேயாகும். நற்பண்புகளையும், நல்லொழுக்க விதிமுறைகளையும் சமூகத்தில் வலம் வரச் செய்வதன் வழி படைப்பாளர்கள் உன்னத மனித அமைப்பிற்கு வழி கோலுகின்றனர். எழுத்தாளர்களின் இவ்வுயரிய நோக்கங்கள் படிப்பாளனுக்குள் அறிவுணர்வை விரிவாக்கி, நம்பிக்கையின் உந்துதலைத் தூண்டிவிடுவதாக அமையுமாயின், அப்படைப்புகள் தரமானவையின் பாற்படுகின்றனர். ஒவ்வொரு மனிதனுள்ளும் வெவ்வேறுபட்ட குணநலன்கள், விருப்புவெறுப்புகள் அடங்கியுள்ளன. சூழலுக்கேற்ப மனிதர்கள் தம்மை தகவமைத்துக் கொண்டாலும் அவரவர்களுக்கே உரிய தனித்துவம் வாய்ந்த செயல்பாடுகள் தாம் ஒருவரைப் பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இவ்வாறு இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைய மனிதன் மேற்கொள்ளும் திறன்களைப் படைப்பாளர்கள் தம் கதைமாந்தர்களின் மூலம் இனங்காட்டுவது வளர்ச்சியைத் தூண்டுவதற்கான நிலைப்பாடேயாகும். தமிழ்நதியின் ‘‘மாயக்குதிரை‘‘ எனும் சிறுகதைத் தொகுப்பிலுள்ள ‘‘நித்திலாவின் புத்தகங்கள்‘‘ எனும் கதையில் சித்தரிக்கப்பட்டுள்ள இலட்சியத்தை எதிர்நோக்கிய தனிமனித ஆக்கச் சிந்தனையை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## ஆளுமை

மனிதர்களுக்குள்ளான வேறுபட்ட சிந்தனைகள், பண்புகள், உணர்வுகள், நடத்தைகள் போன்றவற்றை சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு ஆராயும் போக்கினை “ஆளுமை” என்று கூறலாம்.

> ‘‘ஒருவன் தன்னை எவ்வாறு வெளிப்படுத்துகிறான். பல்வேறு நிலைகளில் சூழ்நிலைகளில் எவ்வாறு இயங்குகிறான் என்பது, அவனது உடல், உள்ளப் பண்புகளின் அடிப்படையில் அமையும். இந்த உடல் உள்ள தனிப்பட்ட அமைப்பே ஆளுமை’’1

என்பர். உடல், மனம் மட்டுமின்றி சூழ்நிலைகள், கல்வி, பண்பாடு, அனுபவம் போன்றவையும் ஆளுமையைத் தீர்மானிக்கும் சக்திகளாகின்றன.

> ’’ஒவ்வொரு ஆளுமைக்கும் உரிய சிறப்பான இயல்பு என்னவெனில் அது சில முடிவுகள் அல்லது குறிக்கோள்களை அடைவதை நோக்கமாகக் கொண்டது’’2

எனலாம்.

நித்திலாவின் புத்தகங்கள்

நடப்பியல், சமூகம், எதிர்காலம், பெண் மரபுக் கட்டுமானங்கள் இவையனைத்தையும் கடந்து வாசிப்பு ஒன்றையே உயிர்மூச்சாகக் கருதி வாழும் பெண்ணின் மனவுணர்வைப் பதிவு செய்துள்ளது நித்திலாவின் புத்தகங்கள். மணவாழ்வு, முறிவு தாயாரின் இறப்பு, வறுமை என்ற எந்தச் சூழ்நிலைகளாலும் தகர்த்தெறிய முடியாத வலிமையுடையதாக நித்திலாவின் புத்தகங்களும், வாசிப்பும் அவளது இளமைப் பருவ வாழ்வாக அமைந்தன. வாசிப்பிற்காக எதையும் செய்யத் துணியும் நித்திலாவின் செயல்பாடுகள் அவளது இறுதிக் காலம் வரை நீடிக்கிற முடிவாக அமைகிறது.

> ”நம்முடைய ஆளுமையானது நாம் எதனோடு தொடங்குகிறோமோ? எதன் வழி வாழ்ந்து முடித்தோமோ அதன் விளைவேயாகும்”3

என்னும் ஜெ.பி.வாட்சனின் கருத்து நித்திலாவின் செயல்பாடுகளோடுப் பொருத்திப் பார்க்க முடிகிறது.

யூங்-ன் வகைப்பாடும், நித்திலாவும்

படுக்கையறை தொடங்கி குளியலறை வரை புத்தகமும் கையுமாக நித்திலா தனக்குள் ஒரு உலகத்தையே உருவாக்கியிருந்தாள்.

> “அவள் அறையைவிட்டு வெளியே வருவது மிகக்குறைவு. எவருடனும் பேசுவதில்லை…”4

> “ஒரு பெரிய உலகமே தன் அலமாரிக்குள் அடைப்பட்டிருப்பதாக அவள் நம்பத் தொடங்கினாள். அந்த மனிதர்களோடு இரகசியமாகப் பேசுவதை வழக்கமாகக் கொண்டாள். இரவுகளில் அவளது அறைக்குள்ளிருந்து குரல்கள் கேட்கத் தொடங்கின….”5

என்றும் குறிப்பிடும் பகுதிகளில் நடைமுறை வாழ்விலிருந்து விலகி பிடித்தமான ஒன்றினுள் முழுவதுமாக மூழ்கடித்துக் கொண்ட தனிமனிதப் பண்பைக் காண்கிறோம். இப்போக்கு உளவியல் அறிஞர் “யூங்” கூறும் அகமுகன் (Introvent) என்ற மனித நடத்தைப் பிரிவுடன் முற்றிலும் பொருந்திப் போவதாக அமைகிறது.

> “இவன் தனித்திருப்பதையே அதிகம் விரும்புவான். இவன் வேலை செய்வதைவிட பகற்கனவு காண்பதிலேயே அதிக ஆர்வமுள்ளவனாக இருப்பான். புத்தகங்களை வாசிப்பதில் அதிக ஆர்வம் உள்ளவனாக இருப்பான்”6

என்னும் உளவியல் கருத்தோடு நித்திலாவின் செயல்பாடு அமையப் பெற்றுள்ளது.

ஈகோ (Ego)

உளவியலறிஞர் சிக்மெண்ட் பிராய்ட் மனித ஆளுமையின் அடிப்படையில் மனதைப் பிரிக்குமிடத்து ”ஈகோ” என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார்.

> “மனிதனின் ”ஈகோ” எனும் இந்த நிலையானது உண்மைக் கொள்கையின் அடிப்படையில் அமைந்தது. சுற்றுப்புறச் சூழ்நிலையை அறிந்து, எண்ணங்கள், செயல்கள், உணர்ச்சிகளை ஒழுங்குப்படுத்தி பிரச்சனைகளைக் கையாள்வதிலும் ஆளுமை குலையாமல் பார்த்துக் கொள்வதிலும் ஈகோ அக்கறை காட்டும். இது ஒரு நடுநிலைவாதி…”7

என்றுரைப்பர். தாயாரின் எதிர்ப்பையும், அவ்வப்போது நிகழும் சுற்றத்தாரின் வருகையையும் சமாளிப்பதோடன்றி, வாசிப்பிற்குத் தடை நிகழா வண்ணம் தன் ஆளுமையை மெருகேற்றி வரும் நித்திலாவின் போக்கு அமையப் பெற்றுள்ளது.

இட் (Id)

இது ஆழ்மனதின் எண்ண ஓட்டங்களால் உருவாவது. தனது மகிழ்ச்சிக்கான வழிமுறைகளை இது எவ்வாறேனும் அடைய நினைக்கும் மனவுணர்வாகும். “இட்” (விலங்கியல் மனநிலை) ஆனது பிடிவாதம் மிக்கது. தமிழ்நதியின் நித்திலாவும் வாசிப்பில் மிகுந்த பிடிவாதம் கொண்டவளாக இருக்கிறாள்.

*"ஒரு தடவை, நூலகத்திலிருந்து இரவல் எடுத்துவர இயலாத அரிதான புத்தகமொன்றின் பக்கங்களைக் கிழித்து எடுத்து வந்தாள். அதன் பிறகு கிழிப்பதை விட்டுவிட்ட முழுப்புத்தகங்களாகத் திருடவாரம்பித்தாள்"9*

*என்று கூறுகிறார். இப்பண்பு தன் விருப்பத்தின் அழுத்தம் காரணமானமாக மனதைத் தூண்டிவிட்டு ஆளுமையைப் பலப்படுத்துகிறது. மேலும், திருடுதல் போன்ற இச்செயல்களைத் தவறில்லை எனும் சமாதானப் போக்கினுள்ளும் அடக்குகிறது.*

*அகமுகன், இட், ஈகோ போன்ற அகக்காரணிகள் மட்டுமின்றி வீடு, குடும்பம், பண்பாடு, உறவு போன்ற சூழ்நிலைக் காரணங்களாலும் ஒருவரது ஆளுமைத் திறன்கள் பாதிக்கப்படுகின்றன.*

*நித்திலாவின் தீவிர வாசிப்புத்தன்மை புத்தகத்தைத் திருடுதல், நகைகளைத் திருடி நூல்கள் வாங்குதல் மட்டுமின்றி,*

*"சேமிப்பு கரைந்து கொண்டே போய் இறுதியில் வீட்டை விற்க வேண்டியநிலை வந்த போது… "10*

*கூட தம் குடும்பத்தின் பொருளாதாரத் தேவையை உணராதவளாக நித்திலா காணப்படுகிறாள்.*

*"… … …. எப்படியாவது எதார்த்த உலகினுள் நித்திலாவை இழுத்துப் போட்டுவிட வேண்டும். அதைச் செய்வதற்கு அப்போதைக்கு அவளுக்குத் தோன்றிய ஒரே வழி நித்திலாவை வேலைக்கு அனுப்புவது தான்"11*

*என்ற தாயின் ஏக்கமும், வருத்தமும் நித்திலாவின் மனதில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.*

*"மற்ற பொம்பளைப் பிள்ளையைப் போல நீ ஏன் இருக்க மாட்டேனெண்டிறாய்?"12*

*என்று பெண்ணிற்கான குடும்பக் கடமைகளாகச் சமூகம் விதித்துள்ள இலக்கணத்தை நினைவூட்டுபவளாகவும், அவளது எதிர்காலத்தை எண்ணி கவலைப்படுபவளாகவும் நித்திலாவின் தாயார் காணப்படுகிறார். தான் மரணமடையும் வரை மாற்றிவயலாத பண்பு கொண்டவளாக நித்திலா இருக்கிறாள் என்று ஆசிரியர் கூறுகிறார்.*

*"… … … …. அவ்வளவு துயரத்திற்கிடையிலும் வேலைக்குப் போக வேண்டியதில்லை என்று நினைக்க உள்ளுக்குள் சந்தோசமாகத்தான் இருந்தது"13*

*என்னும் கூற்று, தாயின் மரணத்துயரைக் காட்டிலும், இனி இடையூறு நிகழாது என்பதே நித்திலாவிற்கு பெரும் நிம்மதியை அளிப்பதாக இருந்தது என்பதிலிருந்து நித்திலாவின் வாசிப்பு கவனிக்கத்தக்க நடத்தையாக மாறிவிட்டதின் விபரீதத்தை உணர முடிகிறது.*

*கல்வி, வாசிப்பு, நூலறிவு இவ்வாறாக நடத்தைக் கூறுகள் மனிதனது நன்னடத்தை ஆளுமையின் வெளிப்பாடாக இருந்தாலும் அவை வாழ்விற்கும், அறிவிற்கும் பயனிப்பதாக இருத்தல் வேண்டும். அதைத்தான் சிறந்த ஆளுமை என்று கூறுவர். ஆனால் நித்திலாவின் நூல்வேட்கை வெறுமனே அனைத்து நூல்களையும் வாசிப்பதோடு நின்றுவிடுகின்றது.*

*"ஏதாவது புத்தகக்கடையிலோ, லைப்ரரியிலோ எனக்கு வேலை கிடைக்குமா?"14*

*எனும் கேள்வி தனிமனிதனுக்கும் சூழலுக்குமிடையே நிகழும் நடத்தைக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைகிறது. இவ்வாறு நித்திலாவின் வாசிப்புப் பழக்கம், ஒரு பண்பாகி, அப்பண்பு வலுப்பட்டு நீடித்த இப்போக்கு அல்லது இவ்வாளுமை தவிர நடைமுறை வாழ்வோடு ஒன்றவியலாத நிலையை ஏற்படுத்துகிறது.*

*முடிவுரை*

*பண்பு, பழக்கவழக்கம், நடத்தை, மனப்பான்மை, விருப்புவெறுப்பு, உடலியல் கூறுகள், மரபு, உளஞ்சார் உணர்வுகள் போன்றவற்றினடிப்படையில் உருவாகும் ஆளுமைத்திறன் அதே உடலியல், உளவியல், சமூகக் காரணிகளால் பாதிப்பிற்கும் உள்ளாகிறது. எந்நிலையிலும் தன் உணர்வுகளை, விருப்பத்தை, பழக்கத்தை மாற்றிக் கொள்ளாத ஆளுமை உணர்வு கொண்ட நித்திலா கதாபாத்திரத்தின் வழி தன் இலட்சியத்தில் அசைக்கவியலாத பற்றுக் கொண்ட "உணர்ச்சி விண்ட நிலை" எனும் ஆளுமைப் பண்பை புனைக்கதையாளர் தமிழ்நதி வெளிப்படுத்தியுள்ளார். தமிழ்நதியின் இடைப்பாளுமை வாசிப்பின் மேன்மையை இலக்கிய உலகிற்கு வெளிப்படுத்துகின்றது. "நித்திலாவின் புத்தகங்கள்" உளவியலாளர்கள் பார்வையில்*

உடல், உளச் சிக்கல்களால் பார்க்கப்படுவதாக இருப்பினும், நூலறிவின் திறத்தைக் காட்டுவதை இலக்கியத்தின் வழி உணர முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. மேற்கோள் முனைவர்.அ.மீனாட்சிசுந்தரம், கற்றல் மற்றும் மனிதவளர்ச்சி உளவியல், ப.110.
2. மேலது, ப.113.
3. மேலது, ப.111.
4. தமிழ்நதி, மாயக்குதிரைகள், ப.28.
5. மேலது, ப.32.
6. முனைவர்.அ.மீனாட்சிசுந்தரம், மேலது, ப.118.
7. மேலது, ப.123.
8. மேலது, ப.124.
9. தமிழ்நதி, மேலது, பக்.31-32.
10. மேலது, ப.35.
11. மேலது, ப.37.
12. மேலது, ப.28.
13. மேலது, ப.39.
14. மேலது, ப.37.

********* ********* ********** ********* ********* ********** ********** **********